நல்லூரின் வீதியில் நடந்தது யாகம்
நாலுநாள் ஆனதும் சுருண்டது தேகம்
தியாகத்தின் எல்லையை மீறிய பிள்ளை
திலீபனைப் பாடிட வார்த்தைகள் இல்லை

பாடும்பறைவகள் வாருங்கள்
புலி வீரன் திலீபனைப் பாடுங்கள் 2
யாகத்தில் ஆகுதி ஆனவன் நாமத்தை
ஆயிரம் ஆயிரம் ஆயிரம் ஆயிரம்
காலங்கள் பாடுங்கள் 2

பாடும்பறைவகள்……………………..

இந்திய ஆதிக்க ராணுவம் வந்தது நீதிக்கு சோதனை தந்தது
நாங்கள் சிந்திய ரத்தங்கள் காய்ந்திடும் முன்னரே கால்களில்
வீழ் எனச் சொன்னது 2
வேங்கைகள் இதை தாங்குமா குண்டை ஏந்திய நெஞ்சுகள் தூங்குமா? 2
வீரன் திலீபன் வாதாடினான் பசி தீயில் குதித்து போராடினான் 2

பாடும்பறைவகள்……………………..

வாயில் ஒருதுளி நீரதும் இன்றி வாசலில் பிள்ளை கிடந்தான்
நேரு பேரனின் தூதுவன் ஏனெனக் கேட்காது ஆணவத்தோடு நடந்தான் 2
சாவினில் புலி போனது தமிழீழமே சோகமாய் ஆனது 2
பார்த்து மகிழ்ந்தது ராணுவம் புலிச் சாவுக்கு ஆதிக்கம் காரணம் 2

பாடும்பறைவகள்……………………..

அன்னிய நாடது ஆயினும் நீயிங்கு ஆதிக்கம் செய்திட வந்தாய் - எங்கள்
மன்னன் திலீபனின் கோரிக்கை யாவையும் ஏளனம் செய்துமே கொன்றாய் 2
துரோகத்தோடு புலி போனது தமிழ் சந்ததியே சூடு கண்டது 2
நெஞ்சினில் ரத்தம் வழிந்தது உந்தன் ஒப்பந்தம் இங்கு கிழிந்தது 2

பாடும்பறைவகள்……………………..